சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 12.03.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **122/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-10 |
| சாட்சியின் பெயர் | : | கணேசன் |
| தந்தை பெயர் | : | கோவிந்தசாமி |
| கிராமம் | : | குடவாசல் |
| தாலுக்கா | : | குடவாசல் |
| தொழில் | : | உதவி ஆய்வாளர் |
| வயது | : | 58 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது குடவாசல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.06.2025-ம் தேதியன்று நான் நிலைய பொறுப்பில் இருந்த போது காலை 10.00 மணியளவில் திருவாரூர் தாலுக்கா,

மணக்கால் அய்யம்பேட்டை பருத்திக்கொல்லை தெருவை சேர்ந்த சின்னப்பிள்ளை மகன் செல்வராஜ் என்பவர் கொடுத்த புகாரை பெற்று காலை 10.00 மணிக்கு குடவாசல் காவல் நிலைய குற்ற எண்.169/2025 சட்டப்பிரிவு 296(பி), 303(2), 332(3), 351(3) BNS r/w 3(1)(r), 3(1)(s), 3(2)(iii), SC ST Act -ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த அச்சு முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கையுடன் வாதியின் புகாரை இணைத்து தஞ்சாவூரில் முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:**

முதல் தகவல் அறிக்கையில் மூன்றாவது காலத்தில் 04.06.2025-ம் தேதி 20.00 மணிக்கு சம்பவம் நிகழ்ந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தவறான தகவலின் அடிப்படையில் இந்த எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம் செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.12 18:44:08 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.